P 5

CA - 2

தேர்வுத்தாள் - 2

பெயர் ____________________ வகுப்பு ____________

**'அ' பிரிவு**

**A1 வேற்றுமை**

Q1 முதல் Q6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

காட்டின் அரசனான சிங்கம் வேறு காட்டிற்குச் சென்றிருந்தது. அதனால், (Q1)_____ தானே அரசனாக வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. அது (Q2)______ குகைக்குச் சென்றது. அங்கிருந்த சிங்கத்தின் தோலை எடுத்து தனது (Q3)_______ போர்த்திக்கொண்டது. குகையைவிட்டு வெளியே வந்த மற்ற (Q4)______ அது சிங்கத்தைப் போன்றே மிரட்டியது. மிருகங்களும் இந்தப் புதிய சிங்கத்திற்குப் பயந்து நடுங்கின. நரி ஒன்று கழுதை செய்வதை எல்லாம் பார்த்துக்கொண்டிருந்தது. (Q5)_____ உண்மையை மறைக்க முடியவில்லை. அது மற்ற மிருகங்களிடம் விவரத்தைக் கூறியது. செய்தியை அறிந்த விலங்குகள் (Q6)______ கழுதையைத் தேடிச் சென்றன. எல்லா மிருகங்களும் தன்னை நோக்கி வருவதைக் கண்ட கழுதை அக்காட்டைவிட்டு ஓட்டம் பிடித்தது.

Q1
(1) கழுதையால்
(2) கழுதைக்கு
(3) கழுதையின் ( )
(4) கழுதையை

Q2
(1) சிங்கத்திற்கு
(2) சிங்கத்தை
(3) சிங்கத்தின் ( )
(4) சிங்கத்தால்



18

www.testpapersfree.com

P 5

தேர்வுத்தாள் -2

## வினா 2

கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு **100 சொற்களுக்குக் குறையாமல்** ஒரு கட்டுரை, கதை எழுது. இந்தக் கட்டுரை, கதை எழுதுவதற்கு நீ படத்தின் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் உதவிச் சொற்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.



| | | |
|---|---|---|
| மூதாட்டி | பள்ளி முடிந்து | வீடுவரை |
| கால்தடுக்கி | தூக்கிவிட்டாள் | கனிவான செயலுக்காக |
| அவதியுற்றார் | வாடகை உந்துவண்டி | "சிங்கா விருது" |



184

P5/ CA 2/2

www.testpapersfree.com

Q3 (1) உடலின்

(2) உடலுக்கு ( )

(3) உடலில்

(4) உடலை

Q4 (1) மிருகங்களை

(2) மிருகங்களிடம்

(3) மிருகங்களுக்கு ( )

(4) மிருகங்களால்

Q5 (1) நரிக்கு

(2) நரியால் ( )

(3) நரியின்

(4) நரியுடன்

Q6 (1) கோபத்தால்

(2) கோபத்தை ( )

(3) கோபத்துடன்

(4) கோபம்



186

www.testpapersfree.com

A2 செய்யுள் பழமொழி

Q7 முதல் Q12 வரையுள்ள செய்யுள் பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏதுவான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

Q7 அன்பிருந்தால் __________ ஆகும்.

1) நல்லதும்
2) ஆகாததும் ( )
3) அனைத்தும்
4) எல்லாம்

Q8 எரிகிற விளக்கானாலும் ________ வேண்டும்.

1) ஊன்றுகோல்
2) எழுதுகோல் ( )
3) தூண்டுகோல்
4) கைக்கோல்

Q9 அன்பிலார் எல்லாம் தமக்குரியர் __________ என்பும் உரியர் பிறர்க்கு.

1) பாசமுடையார்
2) அன்பானவர்
3) அன்புடையார் ( )
4) பற்றுடையார்



187

www.testpapersfree.com

Q10 செயற்கரிய செய்வார் பெரியர் ________

செயற்கரிய செய்க லாதார்.

1) பெரியோர்

2) முதியோர்

3) சிறுவர் ( )

4) சிறியர்

Q11 காலத்தினால் செய்த ______ சிறிதெனினும்

ஞாலத்தின் மாணப் பெரிது.

1) உதவி

2) நன்றி

3) தொழில் ( )

4) கடமை

Q12 கற்க கசடற __________ கற்றபின்

நிற்க அதற்குத் தக.

1) படித்தவை

2) அறிந்தவை

3) கற்பவை ( )

4) தெரித்நவை



188

www.testpapersfree.com

## B3 தெரிவிடைக் கருத்தறிதல்

பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.

ஓர் ஊரில் சாமி என்பவன் வாழ்ந்து வந்தான். அவன் அறிவில்லாதவனாக இருந்ததால் யாரும் அவனுக்கு வேலை கொடுக்க முன்வரவில்லை. ஆதலால், அவன் வேலை தேடி வெளியூர் சென்றான். ஓர் ஊரை அடைந்தவுடன், தற்செயலாக ஒருவரைச் சந்தித்தான். அவரிடம் வேலை கேட்டான். எந்த வேலையும் செய்வதாகக் கூறினான். அதற்கு அவர் எனக்கு வீட்டு வேலை செய்ய ஓர் ஆள் தேவைப்படுகிறது. நீ <u>விரும்பினால்</u> என் வீட்டில் வேலை செய்யலாம் என்றார். சாமி அதற்குச் சம்மதித்தார். சாமி அவருடன் வீட்டிற்குச் சென்றார்.

மறுநாள் காலையில் முகச் சவரம் செய்து கொள்ள முதலாளி சோப்பு, முகம் பார்த்துச் சவரம் செய்ய ஒரு கண்ணாடி, தண்ணீர் முதலியவற்றை எடுத்துக் கொண்டு அமரும்போது அவரின் கால் தவறுதலாகக் கண்ணாடியில் பட்டு உடைந்தது. வேலைக்காரனைக் கூப்பிட்டு, இவ்விடத்தை முதலில் சுத்தம் செய், என்றார். பின், கொஞ்சம் பணம் கொடுத்துக் கடைக்குச் சென்று என் முகம் பார்த்துச் சவரம் செய்து கொள்ள முகம் பார்க்கும் கண்ணாடி ஒன்று வாங்கி வா என்றார். அவனும் சரியென்று கூறிக் கடைக்குப் <u>புறப்பட்டான்.</u>

கடைக்குப் போனவன் அதிக நேரம் ஆகியும் வரவில்லை. மதிய உணவு <u>வேளைக்கு</u> வீட்டுக்குத் திரும்பி வந்தான். "ஐயா, கடையில் ஏராளமான முகம் பார்க்கும் கண்ணாடிகளைக் கண்டேன். ஆனால், அவை யாவும் என் முகத்தை மட்டும் காட்டுகிறது. உங்கள் முகத்தை ஒரு கண்ணாடியும் காட்டவில்லை. அதனால், நான் கண்ணாடி வாங்கவில்லை," என்று சொல்லிவிட்டுப் பணத்தைத் திருப்பிக் கொடுத்தான். இதைக் கேட்ட முதலாளி கோபங்கொண்டு உடனே அவனை வேலையிலிருந்து நீக்கினார்.



www.testpapersfree.com

Q13 முதல் Q17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன.ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

Q13 சாமிக்கு ஏன் வேலை கிடைக்கவில்லை?

1) கெட்டிக்காரனாக இருந்தாதல்
2) அழகாக இருந்ததால்
3) அறிவற்றவனாக இருந்ததால்
4) படித்தவனாக இருந்ததால்

( )

Q14 சாமிக்கு என்ன வேலை கிடைத்தது?

1) வேலையாளாக
2) முதலாளியாக
3) விற்பனையாளராக
4) தொண்டராக

( )

Q15 சாமி எதற்காகக் கடைக்குச் சென்றான்?

1) சோப்பு வாங்கி வர
2) கண்ணாடி வாங்கி வர
3) தண்ணீர் வாங்கி வர
4) முதலாளியின் கட்டளையை நிறைவேற்ற

( )

Q16 சாமி ஏன் கண்ணாடி வாங்கி வரவில்லை?

1) கண்ணாடியில் முதலாளியின் முகம் தெரியாதலால்
2) கண்ணாடியில் சாமியின் முகம் தெரிந்ததால்
3) கண்ணாடி வாங்கத் தெரியாததால்
4) எந்தக் கண்ணாடி என்று தெரியாததால்

( )

Q17 முதலாளி சாமியை வேலையிலிருந்து நீக்கக் காரணம் என்ன?

1) அறிவுள்ளவனாக இருந்ததால்
2) அறிவிலியாக இருந்ததால்
3) சோம்பேறியாக இருந்ததால்
4) சுறுசுறுப்பாக இருந்ததால்

( )



19C

www.testpapersfree.com

## B4 சொற்பொருள்

Q18 முதல் Q20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

Q18 விரும்பினால்

1) ஏற்றால்
2) ஆசைப்பட்டால்
3) ஒப்புக்கொண்டால்
4) விசாரித்தால்

( )

Q19 புறப்பட்டான்

1) சென்றான்
2) நகன்றான்
3) கிளம்பினான்
4) நீங்கினான்

( )

Q20 வேளை

1) நேரம்
2) தொழில்
3) மாலை
4) பொழுது

( )



191

www.testpapersfree.com

B5 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி.

70-ம் ஆண்டு சிறப்பு

தமிழர் மேம்பாட்டுக் கழகமும்

ஈசூன் வட்டாரத் தமிழர் இணைப்பு சங்கங்களும்

இணைந்து படைக்கும்

**தமிழர் திருநாள் கொண்டாட்டம்**

தேதி: 24 செப்டம்பர்

இடம்: ஈசூன் சமூக மன்ற மண்டபம், ஈசூன் எவன்யு 7

நேரம்: மாலை 6 மணி முதல் 10.00 மணி வரை

சிறப்பு விருந்தினர் : செம்பவாங் குழுத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு சண்முகம்

இந்த நிகழ்ச்சியில் தமிழகத்தைச் சேர்நத முனைவர் வைத்தீஷ்வரனன் அவர்கள் 'தமிழர் திருநாளின் தோற்றம்' என்னும் தலைப்பில் உரையாற்றுவார்.

சிறுவர்களுக்கு அன்பளிப்புப் பொட்டலங்கள் வழங்கப்படும்.
பரிசுகளுக்கு ஆதரவு:
தமிழர் சங்கங்கள்

தமிழில் சரளமாகப் பேசும் பார்வையாளர்களுக்கான பரிசுகளை வெல்லும் வாய்ப்பை நழுவ விடாதீர்கள்!



192

www.testpapersfree.com

Q21 முதல் Q23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

Q21 இவ்வாண்டு கொண்டாடப்படும் தமிழர் திருநாளின் சிறப்பு என்ன?

1) ஈசூன் வட்டாரத்தில் இவ்விழா கொண்டாடப்படுகிறது
2) தமிழர் மேம்பாட்டுக் கழகம் இவ்விழாவை ஏற்பாடு செய்வது
3) 70 ஆம் ஆண்டாக இவ்விழாவைக் கொண்டாடுவது
4) இவ்விழாவில் பரிசுகள் வழங்கப்படுவது

( )

Q22 தமிழர் திருநாள் பற்றிச் சிறப்பு உரை நிகழ்த்து இருப்பவர் யார்?

1) செம்பவாங் நாடாளுமன்ற உறுப்பினர் திரு சண்முகம்
2) தமிழகத்தைச் சேர்ந்த முனைவர் வைத்தீஷ்வரன்
3) தமிழர் மேம்பாட்டுக் கழகத் தலைவர்
4) தமிழர் இணைப்புச் சங்கத்தலைவர்

( )

Q23 பார்வையாளர் போட்டியில் வெற்றிப்பெற என்ன திறமை வேண்டும்?

1) தமிழில் சரளமாகப் பேசத் தெரிந்திருக்க வேண்டும்
2) பழைய பாடல்களைப் பாடும் திறமை வேண்டும்
3) நவீன நடனம் ஆடத் தெரிய வேண்டும்
4) ஆடல் பாடல் இரண்டிலும் திறமை வேண்டும்

( )



www.testpapersfree.com

Q24 முதல் Q41 வரையுள்ள வினாக்களுக்கு விடைகளை இந்தப் புத்தகத்தில் எழுது

'ஆ' பிரிவு

C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

பின்வரும் பகுதியில் Q24 முதல் Q28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியி கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. ( 10 மதிப்பெண்கள்)

Q24 இன்று விடியற்காலையில் கனத்த மழை பெய்தது. நான் பள்ளிக்கு வரும்போது சாலையில் எங்கும் ______ ஏற்பட்டிருந்தது. Q24( )

Q25 கீதா வீட்டின் கீழ்த்தளத்தில் உலாவும் பூனைகளுக்கு உணவு கொடுப்பாள். அவள் இரக்க ______ கொண்டவள். Q25( )

Q26 சுற்றுப்பயணிகள் விடுதிகளில் தங்குவர். விடுதிகளை நிர்வகிப்பவர் அவர்களுக்குத் தூய்மையான ______ வழங்கவேண்டும். Q26( )

Q27 அம்மா சந்தைக்குச் சென்று நண்டு வாங்கி வந்தார். அவர் சமைத்த நண்டு ______ மிகவும் ருசியாக இருந்தது. Q27( )

Q28 ரவீன் புதிய உயர்நிலைப் பள்ளிக்குச் செல்கிறான். அவனுக்கு ______ தெரியாததால் அவன் தந்தை அவனை அழைத்துச் செல்வார். Q28( )

| | |
|---|---|
| (1) அறை | (2) கரி |
| (3) வெள்ளம் | (4) அரை |
| (5) கறி | (6) மணம் |
| (7) வலி | (8) வெல்லம் |
| (9) மனம் | (10) வழி |



194

www.testpapersfree.com

D7 முன்னுணர்வுக் கருத்தறிதல்

பின்வரும் பகுதியில் Q29 முதல் Q35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. ( 14 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| ராமநாதன் ஒரு செல்வந்தர். அவர் தன் ஊர்மக்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து தந்தார். இதனால், மக்கள் Q29______ இருந்ததோடு அவரைப் பற்றிக் குறை கூறிக்கொண்டே இருந்தனர். இதை அறிந்த அவர் மிகவும் Q30________. தன் ஊர்மக்களுக்கு ஒரு பாடம் புகட்ட எண்ணினார். சாலையின் நடுவில் ஓர் ஆள் தூக்கக்கூடிய பாறாங்கல்லை வைக்க ஏற்பாடு செய்தார். | Q29(   )<br>Q30(   ) |
| அந்த வழியாக வந்த பலரும் நடுவீதியில் கிடந்த கல்லை Q31_______ சென்றனர். யாருக்கும் அந்தக் கல்லைத் தூக்கி Q32_______ போடவேண்டும் என்ற எண்ணம் தோன்றவில்லை. கல் அங்குக் கிடக்கிறதே என்று மட்டும் குறை கூறிக்கொண்டிருந்தனர். எல்லாரும் மற்றவர்கள் அதை Q33________ என்று எண்ணினார்களே தவிர யாரும் முன்வந்து அதைச் செய்யவில்லை. ஒரு வாரம் கழிந்தது. ராமநாதன் எல்லாரையும் வீதிநடுவில் கூடச் சொன்னார். அவர் தன் பணியாள் ஒருவனிடம் கல்லைத் தூக்கிப் போடுமாறு கூறினார். | Q31(   )<br>Q32(   )<br>Q33(   ) |
| அவனும் அவ்வாறே செய்தான். அதனடியுல் ஒரு பெட்டி இருந்தது. அதில் இந்தக் கல்லைத் தூக்கி எறிவோர்க்கு ஆயிரம் வெள்ளி Q34______ என்று குறிக்கப்பட்டிருந்தது. மக்கள் எல்லாரும் ஆயிரம் வெள்ளியை இழந்துவிட்டோமே என்று வருந்தினர். தங்கள் செய்கையை எண்ணி வெட்கமடைந்த மக்கள் இனிமேல் குறை கூறாமல் Q35______ நடந்துகொள்ள முடிவெடுத்தனர். ராமநாதன் மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினார். | Q34(   )<br>Q35(   ) |

| | | |
|---|---|---|
| (1) வழங்கப்படும் | (2) பொறுப்புடன் | (3) பெறப்படும் |
| (4) எடுப்பார்கள் | (5) பாய்ந்து | (6) அப்புறப்படுத்துவர் |
| (7) கடந்து | (8) மகிழ்ச்சியாக | (9) ஓரமாக |
| (10) வருந்தினார் | (11) நெகிழ்ந்தார் | (12) சோம்பேறியாக |

சுயவிடைக் கருத்தறிதல்

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

அதிகாலை ஆறரை மணி இருக்கும். விமலா தன் வகுப்புத் தோழிகள் இருவருடன் பள்ளிக்கு விரைந்து கொண்டிருந்தாள். சாலையைக் கடந்து மறுபக்கம் சென்று பேருந்தில் ஏறிப் பள்ளிக்குச் செல்ல வேண்டும். சாலைப் பாதுகாப்பு மின்விளக்கின் அருகே வந்து சேர்ந்தபோது சிவப்பு மனிதன் தோன்றிவிட்டான். ஆகவே, விமலா உட்பட அனைவரும் நின்றுவிட்டனர். அப்போது ஒரு முதியவர் ஊன்றுகோலுடன் மெல்ல நடந்து வந்தார். அவர் முன்பின் பாராமல் சாலையில் இறங்கி நடக்கலானார். ஐம்பது மீட்டர் தொலைவில் ஒரு பேருந்து வந்து கொண்டிருந்தது. விமலா சற்றும் தாமதிக்காமல் விரைந்தோடிச் சென்று அந்த முதியவரைத் தடுத்து நிறுத்தித் திரும்பவும் சாலையின் ஓரத்திற்கு அழைத்து வந்தாள்.

சாலைப் பாதுகாப்பு மின்விளக்கில் பச்சை மனிதன் தோன்றினான். விமலா அதிர்ச்சி அடைந்திருந்த அந்த முதியவருக்குத் துணையாக இருந்து அழைத்துச் சென்றாள். அப்போது அந்த முதியவர் தனக்குப் பார்வை தெளிவாக இல்லையென்றும் காதும் மந்தமாகிக் கொண்டிருப்பதாகவும் சொன்னார். தாம் ஏறிச் செல்ல வேண்டிய பேருந்து வந்ததும் தன்னை அதில் ஏற்றிவிடவேண்டும் என்றும் அன்புடன் கேட்டுக்கொண்டார். அவர் சொன்னபடி பேருந்து வந்ததும் விமலா அவரைப் பாதுகாப்பாக அதில் ஏற்றிவிட்டாள். நல்ல வேளையாக அவளுடைய பேருந்தும் வந்தது. அவள் தன் தோழிகளுடன் பேருந்தில் ஏறிப் பள்ளிக்குச் சென்றாள்.

பள்ளியில் கொடி வணக்கம் முடிந்தவுடன் தலைமையாசிரியர் விமலாவின் நற்செயலைப் பற்றி விளக்கிக் கூறினார். எல்லா மாணவர்களும் கைத் தட்டி ஆரவாரம் செய்து தங்கள் பாராட்டுகளைத் தெரிவித்தனர். பள்ளிக்கு வந்து கொண்டிருந்தபோது சாலையில் தலைமையாசிரியர் விமலாவின் செயல்களைக் கவனித்திருக்க வேண்டும் என்று விமலாவும் அவள் தோழிகளும் உணர்ந்துகொண்டனர். விமலா தன் கடமையைத் தான் செய்ததாக எண்ணினாள்.



www.testpapersfree.com

36 முதல் 41 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது ( 20 ம )

36. விமலா எங்குச் சென்றுகொண்டிருந்தாள் ? ( 2 ம)

37. விமலா ஏன் சாலையைக் கடக்காமல் நின்றாள் ? ( 3 ம )

38. முதியவர் முன்பின் பாராமல் சாலையைக் கடக்கக் காரணம் என்ன ? ( 4 ம )

39. விமலா கருணை உள்ளம் கொண்டவள் என்பதை நாம் எவ்வாறு அறியலாம் ? ( 4 ம )

197

www.testpapersfree.com

40. விமலாவின் நற்செயலைப் பற்றித் தலைமையாசிரியர் எப்படி அறிந்தார் ? ( 3 ம )

41. விமலா எதைத் தன் கடமை என்று எண்ணினாள் ? ( 4 ம )



www.testpapersfree.com

P 5

CA - 2

தேர்வுந்தாள் - 2

விடைப்பட்டியல்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1) 2 | 7) 2 | 13) 3 | 18) 2 | 21) 3 | 24) 3 | 29) 12 |
| 2) 3 | 8) 3 | 14) 1 | 19) 3 | 22) 2 | 25) 9 | 30) 10 |
| 3) 4 | 9) 3 | 15) 4 | 20) 1 | 23) 1 | 26) 1 | 31) 7 |
| 4) 2 | 10) 4 | 16) 1 | | | 27) 5 | 32) 9 |
| 5) 2 | 11) 2 | 17) 2 | | | 28) 10 | 33) 6 |
| 6) 3 | 12) 3 | | | | 34) 10 | |
| | | | | | 35) 2 | |

36 விமலா பள்ளிக்குச் செனறுகொண்டிருந்தாள்.

37 சாலை பாதுகாப்பு மினவிளக்கில் சிவப்பு மனிதன தோனறியதால் விமலா சாலையைக் கடக்காமல் நினறுகொண்டிருந்தாள்.

38 முதியவருக்குக் கண்பார்வை மங்கிக்கொண்டிருந்ததாலும் காது சரியாகக் கேட்காததாலும் அவர் முனபின பாராமல் சாலையைக் கடக்க முயனறார்.

39 விமலா அவருக்குச் சாலையைக் கடக்க உதவியதிலும் அவரைப் பேருந்தில் ஏற்றவிட்டதிலிருந்தும் அவள் கருணை உள்ளம் கொண்டவள் எனபதை அறியலாம்.

40 தலைமையாசிரியர் சாலை வழியாக வரும்போது விமலா செய்த செயலைப் பார்த்ததால் அவருக்கு விமலாவின நற்செயலைப் பற்றித் தெரியவந்தது.

41 முதியவர்களுக்கு உதவுவது தன கடமை எனறு விமலா எண்ணினாள்.

199

www.testpapersfree.com